# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 55/நகராட்சி/2017**
**நாள் : 31/12/2018**

**திரு S. அப்துல் மாலிக்,**
**பேர்ணாம்பட்டு.** – **முறையீட்டு மனுதாரர்**

**1. திரு K. முகமது ஆகில்,**
**முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்,**
**2. ஆலியா ஜுபேர் அஹ்மத்,** – **எதிர் மனுதாரர்கள்**
**முன்னாள் நகர்மன்றத் தலைவர்,**
**பேர்ணாம்பட்டு நகராட்சி.**

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, முகமது அலி முதல் தெரு, 17/19 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. அப்துல் மாலிக் அவர்களின் 14.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2017 அன்று பெறப்பட்டு 55/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிக்கை மற்றும் எதிர் மனுதாரர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, முகமது அலி முதல் தெரு, 17/19 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. அப்துல் மாலிக் என்பவர் எதிர்மனுதாரர்கள் குறித்து கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்:-

(1) பேர்ணாம்பட்டு நகராட்சிப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு சாலை, கழிவு நீர் கால்வாய் மற்றும் மின்விளக்குகள் அமைத்ததில் முறைகேடுகள் ;

(2) 03.01.2013 நாளிட்ட ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு மூலம் தாதா வீதியில் ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் அமைக்க ஒப்பந்தம் செய்து பட்டியல் தொகை பெற்றது ;

(3) ஆழ்துளைகளின் கிணற்றின் ஆழத்தை உண்மைக்கு மாறாக M புக்கில் பதிவு செய்தது ;

(4) வரவு செலவு கணக்கு விவரங்களை மன்றத்திற்கு தாக்கல் செய்யாதது ;

(5) தண்ணீர் இல்லாத பழைய ஆழ்துளை கிணறுகளின் பாகங்களையே புதிய ஆழ்துளை கிணறுகளுக்கும் பயன்படுத்தியது ;

(6) 2012–2013-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையினை ஒரு சில வார்டுகளுக்கு மட்டுமே செலவு செய்தது ;

(7) நகர்மன்ற உறுப்பினர் திரு K. முகமது ஆகில், ஷம்ஷாத் பேகம் பெயரில் பினாமியாக டெண்டர் எடுத்தது ;

(8) ஒப்பந்த காரர் ஷம்ஷாத் பேகம் சுங்கவரி நிலுவை வைத்துள்ளது ;

(9) துப்புரவுப் பணியாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் வழங்குவது மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையில் முறைகேடு ;

2. முறையீட்டு மனுதொடர்பாக முறையீட்டு மனுதாரர் திரு S. அப்துல் மாலிக் அவர்களிடம் 03.05.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. நகர் மன்றத் தலைவரிடம் 18 நகர் மன்ற உறுப்பினர்கள் முறையிட்டும் தங்களது வரவு செலவு கணக்கு விவரங்களை தங்களது பார்வைக்கு வைக்கவில்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். திரு. கே. முகமது ஆகில் பினாமி பெயரில் ஒப்பந்தாரர்களை பதிவு செய்து சுமார் ரூ.80 கோடி வரை சம்பாதித்துள்ளார் என்றும் முன்னாள் நகராட்சி தலைவர் திரு.ஆலியார் ஜிபேர் அஹமத் என்பவர் சார்மினார் தெருவில் முறைகேடாக சம்பாதித்து ரூபாய் 1 கோடியில் வீடு கட்டியுள்ளார் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை உறுதி செய்ததுடன் குறிப்பிடப்பட்ட புல எண்களில் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு சேர வேண்டிய பொதுப்பயன் பாட்டு இடங்களை திருவாளர்கள் K.முகமது ஆகில் மற்றும் ஆலியார் ஜுபேர் அஹ்மத் அவர்களும் தங்களது பெயர்களில் பத்திரப்பதிவு செய்து கொண்டனர் என்று எழுத்துபூர்வமாகவும் விசாரணையின் போது தாக்கல் செய்தார். திரு K. முகமது ஆகில் மற்றும் அவரது மனைவி மற்றும் வாரிசுகள், பெயரில் உள்ள அசையா சொத்துக்கள் கட்டியுள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி 100 மடங்கு குறைவாக கட்டி உள்ளார் என்றும் அதனால் நகராட்சிக்கு பல இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

3. மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையர் பொறுப்பினை வகிக்கும் பொறியாளர் தனது அறிக்கையினை 10.05.2017 மற்றும் 25.05.2017 நாளிட்ட கடிதங்களில் சமர்ப்பித்துள்ளார். தாதா வீதியில் 14 வருடங்களுக்கு முன்பு கைபம்புடன் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அக்கிணறு பழுதடைந்தமையால், அப்போதைய நகர் மன்ற உறுப்பினராக இருந்த திரு K. முகமது ஆகில் அவர்கள் மன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்ததால், அத்தீர்மானத்தினை ஏற்று பழைய ஆழ்துளை கிணற்றினை பயன்பாட்டிற்கு கொண்டு வரமுடியாத நிலையில் வேறு இடத்தில் புதிய ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் உடன் அமைக்கப்பட்டதென்றும், 14 ஆண்டுகளுக்கு முன்பு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்ட இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்படவில்லை என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், 21 வார்டுகளிலும் உள்ள சின்டெக்ஸ் டேங்குகளை பராமரிப்பதற்காக டெண்டர் விடப்பட்டது உண்மையென்றும் தெரிவித்துள்ளார். மேலும், காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் பேர்ணாம்பட்டு நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டதால் 2015–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி புதிய ஆழ்துளை கிணறுகள் அமைப்பது கைவிடப்பட்டதென்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். 2012–13–ஆம் ஆண்டில் பேர்ணாம்பட்டு நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் படி அனைத்து பணிகளும் அனைத்து வார்டுகளுக்கும் பாரபட்சமின்றி முறையாக செய்யப்பட்டன என்றும், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு தெரு விளக்கு பணிகளுக்கென நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். ஷம்ஷாத்பேகம் என்பவர் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் என்றும் எந்த ஒரு பணியும் டெண்டர் விடப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளிக்கும் ஒப்பந்ததாரருக்கே மன்றத்தின் ஒப்புதலுடன் பணி உத்தரவு வழங்கப்படுகிறது என்றும் ஷம்ஷாத் பேகம் என்பவர் தினசரி சந்தைக்கான சுங்கத் தொகையினை 2017–ஆம் ஆண்டு மார்ச் முடிய நிலுவையின்றி செலுத்தியுள்ளார் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளும் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊதியம் குறைவாக வழங்கப்படுவதாக எந்தவித புகாரும் சம்பந்தப்பட்ட பணியாளர்களால் தெரிவிக்கப்படவில்லை என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். கடந்த பத்து ஆண்டுகளாக எந்தவித புகாரும் தெரிவிக்காமல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே தற்போது புகார் அளித்துள்ளார் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்ட சில புல எண்களில் அமைக்கப்பட்ட வீட்டு மனைப்பிரிவுகள் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைப்பிரிவுகள் என்றும் எனவே, பொதுப்பயன்பாட்டு நிலங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவில்லை. அப்பொதுப்பயன்பாட்டு நிலங்களை திரு K.முகமது ஆகில் மற்றும் திரு ஆலியார் ஜுபேர் அஹ்மத் ஆகியோர் அபகரித்துள்ளனர் என்பதை உறுதி செய்ய

இயலவில்லை என்பதை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், திரு K. முகமது ஆகில் மற்றும் அவாது மனைவி, வாரிசுதாரர்கள் பெயரில் உள்ள கட்டடங்களுக்கு விதிக்கப்பட்ட வரி விவரங்கள் குறித்து ஆய்வு செய்து சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், ஆழ்துளை கிணறு சம்பந்தப்பட்ட கோப்புகள் மற்றும் அளவு புத்தகங்கள் லஞ்ச ஒழிப்புத் துறையின் ஆய்வில் உள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 26.05.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் இம்முறையீட்டு மனு குறித்து தல ஆய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு விரிவான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு வேலூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரிடம் கோரப்பட்டது. வேலூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களும் 07.07.2017 மற்றும் 23.08.2017 நாளிட்ட கடிதங்களில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

5. எதிர்மனுதாரர்களான திரு K. முகமது ஆகில் மற்றும் திரு ஆலியார் ஜுபேர் அஹ்மத் ஆகியோரிடம் 21.02.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது. திரு ஆலியார் ஜுபேர் அஹ்மத் தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரரான திரு S. அப்துல் மாலிக் என்பவருக்கு நகராட்சியில் ஒப்பந்தப்பணி எதுவும் வழங்கப்படவில்லையெனில், ஒப்பந்தப்பணி எடுத்தவரிடம் கட்ட பஞ்சாயத்து செய்து பணம் வாங்குவதே அவருடைய வேலை என்றும் மனுதாரர் நான்கு ஆண்டு காலமும் அவருடைய மனைவி ஐந்து ஆண்டு காலமும் மன்ற உறுப்பினராக இருந்து உள்ளனர் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். கட்டப் பஞ்சாயத்து செய்வதே இவரது வழக்கம் என்றும் தெரிவித்தார். ஒவ்வொரு மாதமும் மன்ற கூட்டத்திற்கான பொருள் (அஜெண்டா) அனைத்து நகர மன்ற உறுப்பினருக்கும் அனுப்பி நகராட்சி சார்பாக கையெழுத்து பெறுவது வழக்கம். நகர் மன்றப் பொருளில் ஏதாவது குறைபாடு இருப்பின் அவற்றினை மன்ற கூட்டத்தில் தெரிவிக்கலாம் என்றும், முறையீட்டு மனுதாரர் மற்றும் அவரது மனைவியின் ஒன்பது ஆண்டு பதவி காலத்தில் எந்த ஒரு குறையையும் மனு மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ தன்னிடமோ அல்லது ஆணையாளரிடமோ அல்லது மன்ற கூட்டத்திலோ புகார் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், தன்னுடைய வீட்டிற்கு சொத்துவரி ரூபாய் 82/– விதிக்கப்பட்டுள்ளதென தவறான தகவலினை தெரிவித்துள்ளார் என்றும், ஆனால் ஆண்டு வரியாக ரூபாய் 2,150/- செலுத்தப்பட்டுள்ளதென தெரிவித்துள்ளார். மேலும், தானோ அல்லது தனது உறவினர்களோ எந்தவித ஒப்பந்த பணியும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். தான் நகரமன்ற தலைவராக எந்த கட்சியும் சாராமல் சுயேட்சையாக நின்ற வெற்றி பெற்றுள்ளேன் என்றும், இரண்டு வருடங்களுக்கு முன்பாக சிறைக்கைதியான திரு. ரிஸ்வான் இறந்து விட்டார் என்றும் அவரது மரணத்தை கட்டப் பஞ்சாயத்து செய்து பல சட்ட சிக்கல்களை உருவாக்கியவர் என்றும் முறையீட்டு மனுதாரரைக் குறிப்பிட்டு தெரிவித்தார். முறையீட்டு மனுதாரர் கடந்த ஒன்பது ஆண்டுகளில் எந்த ஒரு மனுவும் ஆணையாளரிடம் அளித்ததாக தான் அறிந்த வரையில் இல்லை என்றும் நகராட்சியில் நடைபெற்ற பணிகள் அனைத்தும் ஆணையாளர், பொறியாளர் பார்வையிட்டு போட்டோ மற்றும் ஆவணங்கள் தயார் செய்து காசோலை வழங்குவது வழக்கம் என்றும், அந்த காலக்கட்டத்தில் முறையீட்டு மனுதாரர் எந்தவித புகாரும் அளிக்கவில்லை என்றும், தனது நல்ல பெயரையும் புகழையும் கெடுக்க வேண்டும் என்பதற்காகவே பொய்யான புகார் அளித்துள்ளார் என்றும், எனவே முறையீட்டு மனுதாரர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் திரு ஆலியார் ஜுபேர் அஹ்மத் அவர்கள் விசாரணையின் போது கேட்டுக் கொண்டார். திரு ஆலியார் ஜுபேர் அஹ்மத் அவர்கள் அளித்த வாக்குமூலத்தையே தனது வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ளுமாறு திரு K. முகமது ஆகில், கேட்டுக்கொண்டார்.

6. முறையீட்டு மனுதாரர் அளித்த குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக அவர் அளித்த வாக்குமூலம், எதிர்மனுதாரர்களான திரு K.முகமது ஆகில் மற்றும் ஆலியார் ஜுபேர் அஹ்மத் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் முதன்மையான குற்றச்சாட்டு ஆழ்துளை கிணறுகள் அமைத்தது மற்றும் ஆழ்துளை கிணறுகளின் ஆழத்தை கூடுதலாகக் குறிப்பிட்டு பணம் வழங்கியது. 14 ஆண்டுகளுக்கு முன்பு தாதா வீதியில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறு தூர்ந்து விட்ட நிலையிலேயே மேற்குறிப்பிட்ட தெருவில் வேறு இடத்தில் ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கோடை காலங்களில் பொதுமக்கள் குடிநீருக்கு சிரமப்படுவதை கருத்தில் கொண்டு 21 வார்டுகளிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை நகராட்சி ஆணையரும் ஏற்றுக் கொண்டுள்ளார். 30.10.2015 நாளிட்ட

தீர்மானம் எண்.20, தாதா வீதி, தீராமதி ஷாப் வீதி மற்றும் மௌலா வீதிகளில் மூன்று எண்ணிக்கையிலான ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் பெறப்பட்டதால், ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி கைவிடப்பட்டது எனவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். பேர்ணாம்பட்டு நகராட்சியின் ஆண்டு வரவு செலவு கணக்குகள் மற்றும் மாதாந்திர வரவு செலவு கணக்குகள் நகர் மன்றத்திற்கு வைக்கப்படுகிறது என்றும், மனுதாரர் தெரிவித்துள்ளவாறு உறுப்பினர்கள் கேட்கும் வரவு செலவு விவரங்கள் மன்றத்திற்கு வைக்கப்படவில்லை என்பது உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். 2012–2013–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்தல் மற்றும் குடிநீர் விநியோகப் பணிகள் முறையாக எல்லா வார்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டன என்றும், குறிப்பிட்ட 4 வார்டுகளுக்கு மட்டும் செய்யப்பட்டது என்று மனுதாரர் குறிப்பிட்டது உண்மைக்கு புறம்பானது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். திருமதி ஷம்ஷாத் பேகம் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் என்றும் நகராட்சி தினசரி காய்கறி சந்தையில் தண்டல் வசூலிக்க ஒப்பந்தம் பெற்ற அவர் 2017–ஆம் ஆண்டு மார்ச் முடிய நிலுவையின்றி தண்டல் தொகையினை செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பணி அடிப்படையில் பணியாற்றும் தினக்கூலி பணியாளர்களின் எண்ணிக்கை 43 என்றும் மனுதாரர் குறிப்பிட்டது போல் 48 நபர்கள் அல்ல என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்படி தினக்கூலி பணியாளர்களிடமிருந்து ஊதியம் குறைவாக வழங்குவதாக புகார் எதுவும் வரப்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. முறையீட்டு மனுதாரரும் அவரது மனைவியும் 9 ஆண்டுகள் மன்ற உறுப்பினராகப் பணியாற்றி உள்ளனர். 2016–ஆம் ஆண்டு வரை மன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்த முறையீட்டு மனுதாரரின் மனைவியும் 2012–13–ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற திட்டப் பணிகள் குறித்து எந்தவித முறையீடும் செய்யவில்லை. மேலும், திரு ஆலியார் ஜூபேர் அஹ்மத் முறைகேடாக சம்பாதித்த தொகை மூலம் ரூபாய் ஒரு கோடி மதிப்பில் சார்மினார் தெருவில் வீடு கட்டியுள்ளார் என்பதற்கு எந்தவித ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்க முறையீட்டு மனுதாரர் தவறியுள்ளார். மேலும், அவ்வீட்டிற்கு சொத்துவரியாக ஆண்டுக்கு ரூ.2,150/– செலுத்துவதாகவும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டது போல் ரூ.82/– அல்ல என்றும் எதிர்மனுதாரரான திரு ஆலியார் ஜூபேர் அஹ்மத் தெரிவித்துள்ளார். மேலும், 03.05.2017 அன்று விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் எழுத்து மூலமாக சில கூடுதல் விவரங்களை சமர்ப்பித்தார். சில புல எண்களில் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் பொதுப்பயன்பாட்டு நிலங்களை எதிர் மனுதாரர்கள் திரு K. முகமது ஆகில் மற்றும் திரு ஆலியார் ஜூபேர் அஹ்மத் ஆகிய இருவரும் அபகரித்து பத்திரப்பதிவு செய்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு K. முகமது ஆகில் மற்றும் மனைவி வாரிசுகள் பெயரில் உள்ள அசையா சொத்து விவரங்களை சமர்ப்பிக்குமாறு 16.03.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் கோரப்பட்டது. ஒன்பது மாதங்கட்கு மேல் கடந்த நிலையிலும் மனுதாரரிடமிருந்து எந்தவித பதிலும் வரப்பெறவில்லை. எனவே, ஆதாரங்கள் தாக்கல் செய்திட ஏதும் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது. முறையீட்டு மனுதாரரும் அவரது மனைவியும் மன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த நிலையிலும் உரிய காலத்தில் அவரது கோரிக்கை குறித்து நகராட்சி ஆணையர் அல்லது உயர் அதிகாரிகளுக்கு முறையீடு செய்துக் கொள்ளத் தவறியுள்ளனர். மேலும், எதிர்மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர். மேலும், எதிர்மனுதாரர்களில் ஒருவரான திரு K. முகமது ஆகில் என்பவர் முறையீட்டு மனுதாரரின் உறவினர் என்றும் சொந்த காழ்ப்புணர்ச்சி காரணமாகவே இப்புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றொரு எதிர் மனுதாரரான திரு ஆலியார் ஜூபேர் அஹ்மத் அவர்களும் முறையீட்டு மனுதாரரின் நடவடிக்கையினை சிறப்பித்து கூறவில்லை. எனவே, முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து போதிய ஆதார ஆவணங்கள் இல்லாத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தால் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனினும், ஆழ்துளை கிணறு சம்பந்தப்பட்ட கோப்புகள் மற்றும் அளவு புத்தகங்கள் வேலூர் லஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆழ்துளை கிணறு சம்பந்தமாக லஞ்ச ஒழிப்புத் துறையினரிடமிருந்து வருகின்ற குறிப்புரைகள் மற்றும் நடவடிக்கைகளின் அடிப்படையில் அவற்றின் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென அறிவுறுத்துவதுடன் அது சம்பந்தமாக அறிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஆணையிடப்படுகிறது. மேலும், திரு ஆலியார் ஜூபேர் அஹ்மத் அவர்களின் வீடு மற்றும் திரு K. முகமது ஆகில் மற்றும் அவரது குடும்ப

உறுப்பினர்கள் பெயரில் உள்ள அசையா சொத்துக்களை கண்டறிந்து அவற்றிற்கு விதிக்கப்பட்ட சொத்துவரியினை ஆய்வு செய்து கட்டடத்தின் தன்மைக்கேற்றவாறு விதிகளின்படி வரி விதிப்பு செய்து நிலுவைத் தொகையுடன் வசூலிக்கவும் ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 31–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு S. அப்துல் மாலிக்,
எண்.17/9, முகமது அலி 1–வது தெரு,
பேர்ணாம்பட்டு,
வேலூர் மாவட்டம் – 635 810.

2. திரு K. முகமது ஆகில்,
எண்.2/1, புதுவீதி,
பேர்ணாம்பட்டு,
வேலூர் மாவட்டம் – 635 810.

3. திரு ஆலியார் ஜுபேர் அஹ்மத்,
எண்.50/62, சார்மினார் தெரு,
பேர்ணாம்பட்டு,
வேலூர் மாவட்டம் – 635 810.

4. நகராட்சி ஆணையர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு,
வேலூர் மாவட்டம்.

5. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி